சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

தமிழ் முரசு

# ஜெயா பொறியியல் கல்லூரிகளில் 1100 மாணவர்களுக்கு பட்டங்கள்



திருநின்றவூர் ஜெயா குழும பொறியியல் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழாவில், டிஆர்டிஓ இணை இயக்குநரும் விஞ்ஞானியுமான என்.எஸ்.குமார் பங்கேற்று 1100 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். அருகில் ஜெயா கல்விக் குழுமங்களின் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ், முருகப்பா குழும நிர்வாக துணைத் தலைவர் கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ், குழும இயக்குநர் கே.எல்.சண்முகநாதன், ஆராய்ச்சி துறை தலைவர் எம்.சோமசுந்தரம், கல்லூரி முதல்வர்கள் ஜி.சங்கரநாராயணன், பி.மாரிமுத்து, பி.கோபிநாதன், அகஸ்ட்டியன், முனைவர் ஜி.கலாராணி.

திருவள்ளூர், பிப்.26- சென்னையை அடுத்த திருநின்றவூரில் உள்ள ஜெயா பொறியியல் கல்லூரி வளாகத்தில், ஜெயா குழும பொறியியல் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா கல்விக் குழுமங்களின் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமையில் நடைபெற்றது. ஜெயா பொறியியல் கல்லூரியின் முதல்வர் ஜி.சங்கரநாராயணன் வரவேற்று பேசினார். கல்வி குழும இயக்குநர் கே.எல். சண்முகநாதன், ஆராய்ச்சி துறை தலைவர் முனைவர் எம்.சோமசுந்தரம், ஜெயா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் பி.மாரிமுத்து, ஜெயா சக்தி பொறியியல் கல்லூரி முதல்வர் பி.கோபிநாதன், ஜெயா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் அகஸ்ட்டியன், ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜி.கலாராணி முன்னிலை வகித்தனர். விழாவில் டிஆர்டிஓ இணை இயக்குநரும் விஞ்ஞானியுமான முனைவர் என்.எஸ். குமார், முருகப்பா குழும நிர்வாகதுணைத்தலைவர் கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு 1100 பொறியியல் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்தி பேசினர்.

இதில் பேராசிரியர் அ.கனகராஜ் பேசும்போது, ''கல்வி முறையானது. மாணவர்களின் மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடாது. அது புதுமை, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை சார்ந்ததாக இருக்கவேண்டும்' என்றார்.

விஞ்ஞானி என்.எஸ். குமார் பேசும்போது, ''பட்டதாரிகளை நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக வடிவமைப்பதில் ஆசிரியர்களின் தொடர்ச்சியான கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பினால் கற்றல் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். வளரும் பட்டதாரிகளை வளர்ப்பதற்கு இக்கல்வி குழுமம் மேற்பட்ட சிறந்த வழிகளை பின்பற்றுகிறது'' என்றார்.

கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ் பேசுகையில், ''கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, திறன்கள் மற்றும் பணிக்கான அர்ப்பணிப்பு ஆகியவை எப்போதும் சரியான வழிகளை வழங்கும்'' என்றார்.

முன்னதாக பட்டமளிப்பு விழாவில், ஏரோநாட்டிகல், கம்ப்யூட்டர் சயின்ஸ், எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன், எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல், எம்சிஏ மற்றும் முதுகலை வணிக நிர்வாகம் ஆகிய பிரிவுகளை சேர்ந்த 1100 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது. இதில் பல்வேறு துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.